[1990 ஆகஸ்ட் 20

பத்திரிகை நிருபர்களுக்கு வீட்டுமனைகள் வழங்குதல்

* 9426 திரு. மு. க. ஸ்டாலின் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பத்திரிகை நிருபர்களுக்கு வீட்டுமனைகள் சலுகை விலையில் வழங்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். சென்னை பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ள வாரியத்தின் நிலத்தில் மேம்பாட்டுப் பணிகள் செலவிற்கென ரூ. 20 இலட்சத்தை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு மானியமாக அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

10-45 மணி

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களுக்கு வீடு கட்ட அரசு வழங்கியுள்ள நிலத்தைச் சமூக நீதி கிடைக்கும் வகையில் குறைந்த வருவாய் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கும் கொடுக்கும் வகையில் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்கள் குறைந்த வருவாய் உள்ளவர்கள் என்ற காரணத்தால் தான், அரசு அவர்களுடைய கோரிக்கையைப் பரிவோடு பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு மானியமாக ரூ. 20 இலட்சம் அவர்களுக்கு வழங்குவதற்கு முன் வந்திருக்கிறார்கள். திருவான்மியூருக்கு அடுத்துள்ள கொட்டிவாக்கம் பகுதியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான ரூ. 61.03 இலட்சம் பெறுமானமுள்ள ஐந்தரை ஏக்கர் நிலம் அவர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது. அவற்றை மேம்பாடு செய்வதற்கு ரூ. 38.22 இலட்சம் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக ரூ. 99.25 இலட்சம், அந்த நிலத்தை மேம்பாடு அடையச் செய்வதற்கும், நிலத்தின் கிரயமாகவும் ஆகிறது. இது மிகப் பெரிய தொகை என்றாலும் பத்திரிகை நிருபர்களுக்கு உதவ வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அரசு மானியமாக ரூ. 20 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

1990 ஆகஸ்ட் 20]

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பத்திரிகை நிருபர்கள் வீட்டு வசதி சங்கத்திற்கு நம்முடைய கழக அரசு உதவி வழங்கியதைப் போல இந்த அளவிற்கு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர அரசின் சார்பில் குடிநீர் மற்றும் வடிகால் வசதி மற்றும் சாலை அமைத்தல் ஆகியவற்றுக்காக இதே போன்று திட்டம் செயல்படுத்தப்பட்ட நேரத்தில் அங்கே ரூ. 20 இலட்சம் மானியமாக அரசின் சார்பில் வழங்கியிருக்கிறார்கள். அதே போல கேளராவிலே கட்டுமான செலவிற்காக அரசின் சார்பில் 25 சதவிகிதம் மானியத் தொகையாக வழங்கி இருக்கிறார்கள். இந்த இரண்டு மாநிலங்களின் தகவல்கள் தான் தற்போது என்னிடத்திலே இருக்கின்றன.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்கள் சென்னையிலே மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் எல்லா பகுதிகளிலும் இருக்கிறார்கள். ஆகவே ஆங்காங்கே நிருபர்கள் வீட்டு மனைகள் வேண்டுமென்று கேட்டால் இதே போன்று சலுகையில் ஆங்காங்கே அவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைக்கப்பட்டிருப்பது கூட்டுறவுச் சங்கம். கூட்டுறவுச் சங்கம் என்ற அமைப்பின் பெயரால் நிலம் வாங்கப்பட்டு அதனுடைய மேம்பாட்டுச் செலவிற்காக ரூ. 20 இலட்சம் அரசின் உதவித் தொகை என்ற வகையிலே ஒதுக்கீட்டை அரசு செய்திருக்கிறது. தமிழ்நாட்டினுடைய மற்ற பகுதிகளில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கப்படுகிற மனைகள், வீடுகள், அடுக்கு மாடி வீடுகள் ஆகியவற்றில் பத்திரிகையாளர்களுக்காக 3 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதே மாதிரி வாடகை வீடுகளை எடுத்துக் கொண்டால் சென்னை மாநகரத்தில் பத்திரிகை நிருபர்களுக்காக பீட்டர்ஸ் காலனி, பட்டிணப்பாக்கம் குடியிருப்பு ஆகியவற்றில் 60 வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 15 வீடுகள் என்று பத்திரிகை நிருபர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் இருக்கக் கூடிய பல்வேறு பத்திரிகை நிருபர்களுக்கு, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் 15 வீடுகள் மாவட்டங்களில் ஒதுக்கினால், தற்போது பத்திரிகைகள் அதிகரித்துக் கொண்டு வருகிற காரணத்தால், போதுமானதாக இல்லை. ஆகவே அதிகப்படியான வீடுகளைக்

கட்டி, பத்திரிகையாளர்களுக்குக் குறைந்த வாடகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகமான வீடுகள் ஒதுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

10-50 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவா அவர்களே, வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான வாடகை வீடுகளாகயிருந்தால் அங்கேயிருக்கக்கூடிய வீடுகளுடைய எண்ணிக்கை அடிப்படையில் மூன்று சதவீதத்தை நாம் ஒதுக்குகிறோம். அதைப்போல புதிய வீடுகள்---ஃபிளாட்டுகள், மனைகள் அல்லது வீடுகள் என்று கட்டி முடிக்கப்படும்போதும் மூன்று சதவீதம் என்ற அடிப்படையில் நாம் ஒதுக்கீடு செய்கிறோம். ஆகவே புதியதாக வீட்டு வசதிகள் உருவாகும்போது நிச்சயமாக இந்த விகிதாச்சாரத்தில் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு அரசு தயங்காது.

திருக்கோயில்களில் பணிபுரிகின்ற அலுவலகப் பணியாளர்கள்.

*7084 திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருக்கோயில்களில் பணிபுரிகின்ற அலுவலகப் பணியாளர்கள் தாங்கள் விரும்பினால் இதர கோயில்களுக்கு மாற்றுகின்ற உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறநிலையத் துறையில் ஏற்கனவேயிருந்த அரசுகள் எல்லாம் பலவிதமான மானியங்களைக் கொடுத்து ஆங்காங்கே திருக்கோயில்களில் பணிபுரியும் அலுவலர்களை வைத்து இருந்தார்கள். பிறகு அவர்கள் அரசு பணியாளர்கள் ஆக்கப்பட்டார்கள். இப்போது பெண்களுக்கும் அரசுப் பணிகளைக் கொடுக்கும்படியான ஒரு காலம் வந்திருக்கும்போது, அவர்களுடைய சம்சாரம் வேறொரு இடத்தில் வேலை பார்க்கிறார்கள் என்றால், அந்த இடத்திற்குப் போகப் பிரியப்படுகிறேன்